1968 ஆகஸ்ட் 28]

அரியலூரில் தீயணைப்புப் படை

*158 **வினா.—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரில் ஒரு தீயணைக்கும் படையை அமைக்கும் எண்ணமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, அரியலூர் வட்டாரத்திலே அரியலூர், உடையார்பாளையம், ஜெயங்கொண்டாம் போன்ற பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. அங்குள்ள வீடுகள் கூரை வீடுகளாக இருக்கின்றன. ஏதாவது தீ விபத்து என்றால் 45 அல்லது 50 மைல் தூரத்திலுள்ள திருச்சிக்கு தீயணைக்கும் படைக்காகச் சொல்லிவிட வேண்டியிருக்கிறது. நெருப்பு பிடித்தவுடன் எவ்வளவுதான் விரைவாகத் தகவல் கொடுத்தாலும் தீயணைப்புப் படையினர் வருவதற்குள் எல்லாம் எரிந்துவிடுகிறது. நெருப்பை அணைக்க முடியவில்லை. அவர்கள் எரிந்தவற்றைத்தான் பார்க்கமுடிகிறது. ஆகவே அந்தப் பின் தங்கிய பகுதிகளில் ஒவ்வொரு கோட்டாட்சி உள்ள இடங்களிலே தீயணைப்புப் படைகளை வைத்து அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எந்த எந்த இடங்களிலே தீயணைப்புப் படை ஏற்படுத்தவேண்டுமென்று சில ஊர்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே விரைவிலே பெரம்பலூரிலே ஒரு தீயணைப்புப் படை ஏற்படுத்தப்படுமென்று தெரிகிறது. அரியலூரிலிருந்து பெரம்பலூர் 30 கிலோ மீட்டர் தூரத்திலேதான் இருப்பதினாலே அரியலூருக்கும் பயன்படும். அரியலூரிலே இதுவரையிலும் 1968-ஆம் ஆண்டிலே 6 முறைகள்தான் தீயணைப்புப் படையின் உதவி கோரப்பட்டிருக்கிறது. 1967-ஆம் ஆண்டிலே 15 முறைகளும், 1966-ஆம் ஆண்டிலே 5 முறைகளும், 1965-ஆம் ஆண்டிலே 13 முறைகளும் தீயணைப்புப் படை தேவையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே அங்கே அவசரமாக உடனடியாக தீயணைப்புப் படை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இப்பொழுது இல்லை. முறைப்படி நகரங்களெல்லாம் தீயணைப்புப் படை வசதிகளைப் பெறுகின்றபொழுது பெரம்பலூருக்கும் அந்த வசதி கிடைக்கும். ஆகவே அரியலூருக்கும் அது பயன்படும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோவில்பட்டி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி போன்ற இடங்களிலே தீயணைப்புப் படைகள் ஏற்படுத்தவேண்டுமென்ற முறையில் நெல்லை மாவட்டத்திலே தாலுகாவிற்கொரு இடத்திலே தீயணைப்புப் படை அமைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது நேரடியாக இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டதல்ல என்றாலும் இதற்கு நான் அளித்திருக்கிற பதில் நண்பர் எழுப்பியிருக்கிற பிரச்சினைக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]